THIRUMATHI T. N. ANANDANAYAKI : How long will the training be given to the backward students and what are the facilities given to the students staying here?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது கால கட்டம். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

DR H. V. HANDE : In view of the fact that I.A.S. is not the only all India service, but there is the entry into 'Dufferin', Indian Institute of Medical Science, All-India Medical Service, etc., and in these services the number of candidates getting through from our State is low, will the Government try to expand it a little so as to cover all the above services like entry to Dufferin, technical services, etc., so that more applicants may be coming forward?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, தற்போது இந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் ஐ. ஏ. எஸ். தேர்வுக்கு மட்டுமே பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Government Servants' Co-operative House and Land Society

* 387 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Madras Government Servants' Co-operative House and Land Society Limited (Regd. XNC 644) was liquidated;

(b) if so, whether arrangements had been made to refund the amounts due to the members; and

(c) the present position of the affairs of the Society?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இதுவரை கலைக்கப்படவில்லை.

(இ) & (உ) இந்த சங்கத்தில் பணத்தை கையாடல் செய்த குற்றத்திற்காக சங்கத்தின் நிர்வாகிகள் ஐந்து பேர்களின் மேல் சென்னை VIII-வது குற்றவிசாரணை மாநகர நீதிபதியிடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அவர்களில் ஒருவர் மட்டுமே குற்றவாளி என்று அவருக்கு 9 மாத கடுங்காவல் தண்டனை கொடுத்து மற்றவர்களை விடுதலை செய்தும் நீதிபதி தீர்ப்பளித்தார். விடுதலை செய்யப்பட்ட நான்கு பேர் மேலும் குற்றம் இருப்பதால், இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பின் மேல் அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. சங்கத்தின் புத்தகங்களும் பதிவேடுகளும் நீதிமன்றத்தில் இருக்கின்றன. நீதிமன்றத்திலிருந்து இவைகள் திரும்பக் கிடைத்ததும் சங்கத்தை கலைப்பதற்கும் அங்கத்தினர்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1971 டிசம்பர் 14]

DR. H. V. HANDE: May I know whether it is a fact that some top Officers like the Chief Record Section Officer of the Co-operative Stores and Chief Officer of the Food and Agriculture Department—Chief Promoter—were involved in this and whether it is a fact that Rs. 100 was collected from each of the members or constituents and the amount is not returned even though the amount is due? When they were not getting these houses—now according to the Minister himself there was cheating—may I know whether it is possible for the Government to see without waiting for the Supreme Court's or High Court's Judgment to return the amount to the persons who are involved because some of them have also retired?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, இதில் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த 5 பேர்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். உணவு விவசாய இலாகாவைச் சேர்ந்த கே. ஆர். சுப்பிரமணியம், எம். வி. கோதண்டம், எம். பி. இராமச்சந்திரன், பொதுத் துறையைச் சேர்ந்த ராஜேந்திரலால், கிராம உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த அப்பன்லால் ஆகிய இவர்களைத் தவிர கனம் உறுப்பினர் சொன்னதைப்போல் மற்றவர்கள் சம்பந்தமாக ஒன்றும் இருப்பதாகத் தகவல் இல்லை.

DR. H. V. HANDE: I meant the same K. R. Subramaniam, Food and Agriculture Department—Promoter. But may I know whether it is possible to return the amount because many of them have retired and they have already given the amount—Rs. 100 and odd? I want to know whether it is possible without waiting for the judgment to reimburse the amount or return the amount taken from them.

THE HON. THIRU K. RAJARAM: The books are lying with the Court. Without it, it is not possible for the Society to return the amount at all.

சீட்டு நிதிகள்

* 388 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீட்டுக் கம்பெனிகளை ஒழுங்குபடுத்தப் புதிய சட்டம் இயற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை

திரு. என். கிட்டப்பா: இப்படித் தனியார் லைசென்சு பெற்று நடத்தப்படுகிற சீட்டுக் கம்பெனிகளால் மக்கள் மோசம் செய்யப்பட்டு நட்டமடைகிறார்கள். ஆகவே, அரசாங்கமே சீட்டுக் கம்பெனிகளை நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அப்படிப்பட்ட உத்தேசம் இன்றைக்கு இல்லை. எங்காவது தவறு நடந்தால் தகவல் கொடுக்கலாம். தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.